

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் விழா மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் இணைப்புகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



கோவை வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் சர்க்கார்சாமகுளம் பேரூராட்சிக்கு உட்பட்ட கோவில்பாளையம், குமரன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கோவை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொ.அ.ரவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக மாணவரணி தலைவர் வழக்கறிஞர் ராஜீவ் காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் அசோக்பாபு, ஜெயந்தி, எம்.என். செந்தில், ரஹ்மான், புருசோத்தமன், சி.ஆர். ராமச்சந்திரன், அருண்குமார் முத்துசாமி, நாகராஜ், மாலதி, டி.ஆர்.சண்முகசுந்தரம் சோமு என்கிற சந்தோஷ் சுப்பிரமணி,அஸ்ரப் அலி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டத்தில் ரூ.54.55 கோடி மதிப்பீட்டில்

# 572 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், செப். 14 - திருப்பூர் மாவட்டத்தில் 572 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.54.55 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்புக்கான காசோலைகளை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 09.09.2024 அன்று மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர்கள், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் வடக்கு, 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் திருப்பூர் தெற்கு, கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், வடக்கு மாநகர செயலாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன் குமார் ஜி.கிரியப் பனவர், மகளிர் திட்ட இயக்குநர் சாம்சாந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் 572 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.54.55 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்புக்கான காசோலைகளை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாழ்வாதாரம் இயக்கத்தின் மூலம் மகளிர் ஊரக உதவி குழுக்களுக்கு கடந்த 20212022 ஆண்டுக்கு ஊரக சுய பகுதிகளில் 5,967 மகளிர்சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.311.34 கோடியும், நகர்ப்புற பகுதிகளுக்கு 790 மகளிர்சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.250.30 கோடியும், 2022 23 ஆண்டு ஊரக பகுதியில் 6,972 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.407.10 கோடியும், நகரப் பகுதிகளில் 3,355 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.180.45 கோடியும். 2023 24 ஆம் ஆண்டுக்கு ஊரக பகுதிகளில் 5,432 குழுக்கள் ரூ.249.34 கோடியும், நகரப் பகுதிகளில் 4,494 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.228.95 கோடியும், நடப்பு ஆண்டு 20242025 ஆம் ஆண்டு ஊரக பகுதிகளில் 4,823 சுய உதவி குழுக்களுக்கு ரூ.410.00 கோடியும், நகர்புற பகுதிகளில் 6,379 சுய உதவி குழுக்களுக்கு ரூ.385.00 கோடி வங்கிக்கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஊரக பகுதிகளில் 2,242 சுய உதவி குழுக்களுக்கு ரூ.157.68 கோடியும், நகர்புற பகுதிகளில் 3,192 சுய உதவி குழுக்களுக்கு ரூ.112.19 கோடியும் வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 33,016 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.1,951.90 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட இயக்குநர் சாம்சாந்தகுமார், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி. மு. நாகராசன், நல்லூர் பகுதி செயலாளர் மேங்கோ அ.பழனிச்சாமி, மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் சி.கோவிந்தசாமி (3ம் மண்டலம்), தம்பி ஆர். கோவிந்தராஜ் (2ம் மண்டலம்), வெ.உமா மகேஸ்வரி (1ம் மண்டலம்), கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமா மகேஸ்வரி, மாவட்ட அவைத் தலைவர் க.நடராஜன், துணை செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர், வழக்கறிஞர் எஸ்.குமார், டிஜிட்டல் எஸ்.சேகர், மாவட்ட அமைப்பாளர்கள் ஈ.தங்கராஜ் இளைஞர் அணி, பெரியார் காலனி எம்.எஸ்.மணி வர்த்தகர் அணி, ப.கலைச்செல்வி மகளிர் அணி, ஆனந்தி மகளிர் தொண்டர் அணி, உதவி திட்ட அலுவலர்கள் கௌதமன், சம்பத்குமார், சரவணக்குமார், பழனிவேல், பாஸ்கர், பாஸ்கரன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தாயார்

# திருமதி ஆர்.ஆண்டாளம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.14 - விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்களது தாயார் திருமதி ஆர்.ஆண்டாளம்மாள் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்களது அருமைத் தாயார் திருமதி ஆர்.ஆண்டாளம்மாள் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

அன்னையை இழந்து வாடும் சீனிவாசன் மற்றும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

# ஒன்றிய - நகர - பகுதி பேரூர் மாணவரணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், செப் 14- கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என்று மாவட்ட திமுக செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பின்படி, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள்



விண்ணப்பிக்க லாம். இதில் ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர். துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர் / பழங்குடியினத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம். ஒரு துணை அமைப்பாளர் தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம். நியமிக்கப்படவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரி / டிப்ளமோ படிப்பை முடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் வேண்டும். இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் கடலூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்திலோ அல்லது முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ அல்லது வலைதள முகவரியி லிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் ,மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும். அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் அந்தந்த மாவட்டத்திலேயே மாணவர் அணி நிர்வாகி களால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் பின்னர் தெரிவிக்கப்படும்.

குறிப்பு: ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ண ப்பத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பி னால் அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்ப வேண்டும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/mwoy

மேலும் தொடர்புக்கு: முகநூல் http://www.facebook.com/EzhilarasanCVMP,

டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCVMP

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### பவள விழா ஆண்டில்

# புதுச்சேரியில்- இல்லந்தோறும் கழகக்கொடி ஏற்றிடுவீர்!

## கழக நிர்வாகிகளுக்கு அமைப்பாளர் இரா. சிவா வலியுறுத்தல்!

புதுச்சேரி, செப். 14 - புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நம் கழகத் தலைவர், திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தொழில் முதலீடுகளை ஈர்த்து தொழில் துறையில் தமிழ்நாடு புரட்சி கண்டிட வேண்டும், படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் அமெரிக்கா சென்று பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து முதலீடுகளை ஈர்த்து வருகிறார். இதுமட்டுமல்லாமல் அமெரிக்காவில் வாழும் தமிழர்களை சந்தித்து பேசினார். அப்போது தமிழர்களுக்குள் எந்த பிளவும் ஏற்பட அனுமதிக்காதீர்கள் என்றும் ஆண்டுக்கு ஒரு முறையாவது தமிழ்நாட்டுக்குக் குடும்பத்துடன் வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார். மேலும், தங்களை சந்தித்ததில் அளவில்லா மகிழ்ச்சி அடைந்ததாகவும் தெரிவித்த முதல்வர் அவர்கள் அமெரிக்க வாழ் தமிழர்களின் நல்வாழ்வு சிறக்க வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

இதனிடையே அமெரிக்காவில் இருந்து கழக ஒருங்



கிணைப்புக் குழுவினருடன் காணொலி காட்சி வாயிலாக பேசிய கழகத் தலைவர் அவர்கள் கழகத்தின் பவள விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் கடைபிடித்து, பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம், 75 ஆண்டுகளாக மக்களுக்குப் பணியாற்றி, இந்த 2024-ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினைக் கொண்டாடுகிறது.

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை செயல்படுத்தி சட்டங்களை உருவாக்கி இன்று இந்தியாவை வழிநடத்தக் கூடிய வகையில் தி.மு.கழகம் தனக்கென தனித்துவமான ஒரு இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. பேரறிஞர் அண்ணா கண்ட இப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது 75-வது ஆண்டினை பவள விழாவாக கொண்டாடி மகிழ வேண்டும் என்பதே நம் கழகத் தலைவரின் விருப்பம்.

“பவளவிழாவையொட்டி கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திட வேண்டும்” என்று நமது கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதியார் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அதன்படி வீதிகள் தோறும் பறக்கும் இருவண்ணக்கொடி நம் வீடுகள்தோறும் பறந்திட செய்ய வேண்டும். கழகக் கொடி பறக்காத கழகத்தினரின் வீடுகளே இல்லை எனும் வகையில் பவள விழாவை முன்னிட்டு, புதுச்சேரி மாநிலத்தில் உள்ள நமது கழகத்தினரின் இல்லங்கள் - அலுவலகங்களில் கழகக்கொடி ஏற்றி கொண்டாட வேண்டுமாய் கழக நிர்வாகிகள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்

### தருமபுரி கிழக்கு மாவட்டத்தில்

# இல்லந்தோறும் கழகக் கொடி ஏற்றுவோம்!

## தடங்கம் பெ.சுப்பிரமணி அறிக்கை!

தருமபுரி, செப். 14 - பவள விழா நிறைவினைக் கொண்டாடும் வகையில் தருமபுரி கிழக்கு மாவட்டம் இல்லந்தோறும் கழக இருவண்ணக் கொடி ஏற்றி கொண்டாடுவோம் என மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாள் செப்டம்பர் 17, அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் செப்டம்பர் 15,, கழகம் தோன்றிய நாள் செப்டம்பர் 17,, ஆகிய இவ்விழாக்களை முப்பெரும் விழாவாக கொண்டாடுவது வழக்கமே தந்தை பெரியார் தனது இறுதி மூச்சு வரை சுயமரியாதை கொள்கைக்காக போராடி தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ வித்திட்டவர். தமிழர்க்கென இயக்கம் கண்டு தன் பேச்சால், எழுத்தால், தமிழர்களை ஒன்று திரளச் செய்தவர் பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிருக்காவிட்டால் தமிழகம் எல்லாத் துறையிலும் முன்னேற்றம் கண்டிருக்காது தொழில், கல்வி மேம்பட்ட மாநிலமாக மாற்றிட பல சாதனைகளை படைத்த தமிழினத்தலைவர் கலைஞர் . இப்படிப்பட்ட இயக்கத் தலைவர்கள் வழியில் இயக்கம் காக்கும் மாண்புமிகு முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முப்பெரும் விழா விருதுகளை செப்டம்பர் 17ல் சென்னை நந்தனம் ஓம். எம்.சி.எ திடலில் வழங்குகிறார். தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம், 75 ஆண்டுகளாக மக்களுக்குப் பணியாற்றி,இந்த 2024 ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினைக் கொண்டாடுகிறது.பவள விழாவையொட்டி கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்க ப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திட வேண்டும்அதன்படி வீதிகள்தோறும் பறக்கும் இருவண்ணக் கொடி நம் வீடுகள்தோறும் பறந்திட வேண்டும் கழகக்கொடி பறக்காத கழகத்தினரின் வீடுகளே இல்லை என்னும் வகையில் பவள விழாவை முன்னிட்டு நம் அனைவரது இல்லங்கள் - அலுவலகங்கள் - வணிக வளாகங்களில் கழகக் கொடி ஏற்றி கொண்டாடுவோம். மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் முப்பெரும் விழா நிகழ்சிகளை ஏற்பாடு செய்து சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி தெரிவித்துள்ளார்.



தர்மபுரி கிழக்கு மாவட்டம் பொது உறுப்பினர் கூட்டம் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,நகர கழக செயலாளர் நாட்டான் மாது,முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி. இன்பசேகரன், முன்னாள் எம்.பி.டாக்டர்.டி.என்.வி.எஸ். செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, மாநில கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, மாநில நிர்வாகிகள் தருமச்செல்வன், செந்தில்குமார், நகர் மன்ற தலைவர் லட்சுமிமாது, இளைஞர் அணி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், மகளிர் அணி அமைப்பாளர் முத்துலட்சுமி மற்றும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக

# நேர்முக உதவியாளர் ர.பிரகாஷ் மறைவு!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. நேரில் அஞ்சலி

தஞ்சாவூர், செப்.14 - தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் அலுவலக நேர்முக உதவியாளரும், கும்பகோணம் மேற்கு ஒன்றியம், திப்பிராஜபுரம் ஊராட்சி 1வது கிளை செயலாளர் கே.ரவி அவர்களின் மகனுமான ர.பிரகாஷ் 11.09.2024 அன்று மாலை 07.00 மணியளவில் சாலை விபத்தில் அகால மரணமடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த ர.பிரகாஷ் கும்பகோணம் சட்டமன்ற அலுவலகத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வந்தார். சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி தேர்தல் பணிகளையும் கழகத் தோழர்களோடு இணைந்து சிறப்பாக பணியாற்றியவர். இவருக்கு ஐஸ்வர்யா என்ற மனைவி உள்ளார்.

பிரகாஷின் மறைவு செய்தி அறிந்த தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, கும்பகோணம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், கும்பகோணம் மாநகரச் செயலாளர் - துணை மேயர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர்செயலாளர்,மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி சடங்கு 12.03.2024 மாலை 05.00 மணிக்கு திப்பிராஜபுரம் மயானத்தில் நடைபெற்றது.





தலைமைக் கழக அறிவிப்பிற்கிணங்க தஞ்சாவூர் மத்திய. வடக்கு, தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளரும், திருவையாறு சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகர், தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கல்யாணசுந்தரம், எம்.பி., தஞ்சாவூர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினருமான அண்ணாதுரை, எம்எல்ஏ., தலைமை வகித்தார்கள் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் காரல் மார்க்ஸ்,மாநில சமூக வலைத்தள பொறுப்பாளரும், தஞ்சை மண்டல மகளிர் அணி பொறுப்பாளருமான ரேகா பிரியதர்ஷினி, மாநில சமூ. வலைத்தள பொறுப்பாளரும், தஞ்சை மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளருமான ரத்னா லோகேஷ்வரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இதில் மகளிர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.